
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1273

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

67

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்: ஆட்சி மாற்றம் தந்த புத்துயிர்!




*2022-ஆம் ஆண்டு மார்ச் 23-ஆம் தேதி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு காரசாரமான விவாதம். 'தாலிக்குத் தங்கம் திட்டத்தினை, தி.மு.க. அரசு தொடரவில்லை' என அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டு, குரல் எழுப்பினர். அதற்குப் பதிலளித்த அன்றைய முதலமைச்சர் நம் கழகத் தலைவர் அவர்கள், அதற்கு முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அவர்களே கைவிட்ட திட்டம் எனப் புள்ளிவிவரங்களோடு விளக்கியதுடன், பத்தாண்டுகளுக்கு முன்னர் தி.மு.க. கொண்டுவந்த திட்டங்கள், எவற்றையெல்லாம் அ.தி.மு.க. முடக்கியது எனப் பட்டியலிட்டார்.*

*சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்ட தலைமைச் செயலக வளாகம், மருத்துவமனையாக மாற்றப்பட்டது. அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம், பாழடிக்கப்பட்டது. இராணி மேரிக் கல்லூரியை இடிக்க முயற்சி செய்ததுடன், வளாகத்தில் இருந்த 'கலைஞர் மாளிகை' பெயர் நீக்கப்பட்டது. சமத்துவபுரங்கள் பழுதுபார்க்கப்படாமல் கைவிடப்பட்டன; உழவர் சந்தைகள் இழுத்து மூடப்பட்டன. மதுரவாயல்-சென்னை துறைமுகம் உயர்மட்டச் சாலைத் திட்டம் நிறுத்தப்பட்டது, சமச்சீர் கல்விப் பாடப்புத்தகங்களில் இருந்த கலைஞர் பெயர் மற்றும் வாழ்த்துப் பாடல்கள், ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கப்பட்டன. குறிப்பாக, கிராமப்புற மக்களின் முக்கிய வாழ்வாதாரத் திட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டு வந்த, 'நமக்கு நாமே திட்டம்', 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்', 'வருமுன் காப்போம் திட்டம்' ஆகியவை முடக்கப்பட்டன என எல்லாவற்றையும் பட்டியலிட்டார். அம்மையார் ஆட்சியில், 10 ஆண்டுகளாக மட்டும் முடக்கி வைக்கவில்லை. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை முடக்கியதற்கான வரலாறு 20 ஆண்டுகளைக் கொண்டது.*

### நிதி ஒதுக்காமல் பாரபட்சம்

*2001-இல் அம்மையார் ஆட்சிப் பொறுப்பேற்றதும், தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்டு, முன்னுதாரணமாக இருந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை முடக்கினார். கிராம உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொதுமக்கள் பங்களிப்பை ஊக்குவிக்கும் அந்தத் திட்டங்களை முடக்கும் செயல், நேரடியாக இல்லாமல், பெயர் மாற்றம் செய்கிறேன் என அன்றே 'ஸ்டிக்கர் ஒட்டும் வேலை'யைத் தொடங்கினார். அந்தத் திட்டத்துக்குப் பெயர், 'கிராமத் தன்னிறைவுத் திட்டம்'. அதுவும் நேரிடையான ஒரே மாற்றுத் திட்டமாகக் கொண்டு வராமல், ஊரக வளர்ச்சி நிதியைப் பல திட்டங்களுக்கும் திசைதிருப்பினார். 'கிராம தன்னிறைவுத் திட்டம்', 'மழைநீர் சேகரிப்புத் திட்டம்', 'தொட்டில் குழந்தைகள் திட்டம்' எனப் பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் இலக்கு முடங்கியது, எந்தப் புதிய நிதி ஒதுக்கீடும் செய்யப்படாமல், திட்டம் கிடப்பில் போடப்பட்டது.*

*தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை விவாதங்களின்போது, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே அண்ணாவின் பெயரிலான மக்கள் நலத்திட்டம் முடக்கப்படுகிறது என மிகக் கடுமையான விமர்சனங்களைச் சட்டமன்றத்தில் பதிவு செய்துள்ளனர். 'அண்ணா பெயரில் அமைந்த கட்சி, அண்ணா பெயரில் அமைந்த திட்டத்தை முடக்குவதா?' எனத் தொடர்ச்சியாகக் கலைஞர் கொடுத்துவந்த அழுத்தங்கள், உள்ளாட்சித் தேர்தல் தந்த தோல்வி காரணமாக, 2002-ஆம் ஆண்டு, ஜூன் ஒரு அரசாணை வெளியிட்டார் அம்மையார்.*

*சிறு தொழில்கள் துறை மூலம் வெளியான அந்த அரசாணை, ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பை உருவாக்க, 'புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற முற்றிலும் புதிய வழிகாட்டுதல்கள் கொண்ட தொழிற்சாலை சார்ந்த மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதாகக் கூறியது. ஆனால், அந்தத் திட்டங்களின்மூலம் கிராமத் தன்னிறைவுக்குச் செலவிடப்பட்ட நிதி, வறுமை ஒழிப்பு மற்றும் குடியிருப்புகளை உருவாக்கவில்லை என்றன புள்ளிவிவரங்கள். தி.மு.க. ஆட்சியின் தொலைநோக்குப் பார்வை, தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கவனத்தில் கொள்கிறது என்றால், ஆட்சி மாறியதும் அந்தத் திட்டங்களுக்கு மாற்றுப்பெயர்கள் சூட்டுவதே, அடுத்து ஆளும் கட்சிகளின் வேலையாக இருந்தது. இன்றுவரை அந்தப் போக்கு தொடர்கிறது.*

> **அம்மையார் அரசால் முடக்கப்பட்ட 'உழவர் சந்தை' 'சமத்துவபுரம்' போன்ற திட்டங்களுக்கும் நீதிமன்றம் செல்லாமல், ஆட்சிமாற்றத்தின் மூலமாகவே மீண்டும் புத்துயிர் அளித்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.**

*இதற்கிடையே ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, 2006-ஆம் ஆண்டு மீண்டும் முதலமைச்சரானார், முத்தமிழறிஞர் கலைஞர். ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய நம் கழகத் தலைவர் அவர்கள். அடுத்த சில மாதங்களில், செப்டம்பர் 11-ஆம் தேதி, அந்தத் துறையிலிருந்து உத்தரவு வெளியிடப்பட்டது.*

*'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் (All Villages Anna Renaissance Scheme) என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தி, செயற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளதாக' அந்த அரசாணை விளக்கியது. தமிழ்நாட்டில் இருந்த 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகளில், ஆண்டுக்கு சுமார் 2 ஆயிரத்து 500 ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 5 ஆண்டுகளில் திட்டம் முழுமையாகச் செயல்படுத்த இலக்கு வைக்கப்பட்டது.*

*ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக அந்தத் திட்டத்துக்கு நேரடி பொறுப்பேற்றார், நம் கழகத் தலைவர் அவர்கள். அந்தத் திட்டத்துக்காக 2006-2007 நிதியாண்டில், மாநில அரசு சார்பில், ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. அதில் முந்தைய திட்டங்களின் நிதியும் சேர்க்கப்பட்டு, நேரடியாக ஒரே திட்டமாகக் கொண்டு செல்லப்பட்டன. குறைந்த தனிநபர் வருமானம் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஒவ்வொரு ஊராட்சிக்கும் சுமார் ரூ.20 இலட்சம் நிதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.*

*'ஸ்டிக்கர்' ஒட்டி முடக்கப்பட்ட ஒரு திட்டத்தை, சட்டமன்றம் வாயிலாகவே மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவந்தார் கலைஞர். நீதிமன்றம் செல்லவில்லை. ஆனால், 'மக்கள் மன்றம்' சென்றார். 2006-இல் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, தங்களின் முந்தைய இலக்கினை விடவும் பன்மடங்கு அதிகமாக 'அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' (AGAMT) என்ற பெயரில், மாநிலத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளின் கட்டமைப்பு மாற்றத்துக்கு வித்திட்டார். இதேபோல அம்மையார் அரசால் முடக்கப்பட்ட 'உழவர் சந்தை' 'சமத்துவபுரம்' போன்ற திட்டங்களுக்கும் நீதிமன்றம் செல்லாமல், ஆட்சிமாற்றத்தின் மூலமாகவே மீண்டும் புத்துயிர் அளித்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.*

**...தொடரும்**

## அரசியல் இலாபக்கணக்கில், கரூர்!

கரூரில் உயிரிழந்தவர்களின்மீது மட்டுமே, முதல்வர் விஜய்க்கு தனிக்கருணை ஏற்படுவதெல்லாம், அப்பட்டமான அரசியல் என விமர்சனம் செய்துள்ளார், பத்திரிகையாளர் தெ.சு,கவுதமன். அவரது பதிவில், விஜய்யைப் பார்க்க வந்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 55-க்கும் மேல்! அத்தனை பேருக்கும் இதேபோல் இழப்பீடு தரப்படவில்லையே ஏன்? கரூரை மட்டுமே, இவர் குறிவைப்பதன் காரணம், அங்கே த.வெ.க. தேர்தல் தோல்வியைச் சந்தித்ததுடன், அடுத்து வரும் இடைத்தேர்தலில், விஜயபாஸ்கரை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

கரூரில் உயிரிழந்தவர்களுக்கு மட்டும் இழப்பீடாக, விஜய் தரப்பு ரூ.20 இலட்சம், அப்போதைய தமிழ்நாடு அரசு ரூ.10 இலட்சம், ஒன்றிய அரசு ரூ.2 இலட்சம், வி.சி.க. சார்பில் ரூ.50 ஆயிரமுமாக வழங்கப்பட்டன. இத்தனைக்குப் பிறகும் அரசு வேலையை வழங்கினார், முதல்வர் விஜய்! ஒரு விபத்துக்கு, இந்தளவு இழப்பீடு இதுவரை தரப்பட்டதில்லை.

சமீபத்தில், அமோனியா வாயுக் கசிவில் 18 பேர் உயிரிழந்தனர். அவர்கள் அனைவரும் உழைத்து சம்பாதிப்பதற்காக அங்கே இருந்தபோது, தொழிற்சாலையில் வாயுக் கசிவால் உயிரிழந்துள்ளனர். அவர்களுக்கு விஜய் அறிவித்த இழப்பீடு, வெறும் 2 இலட்சம் ரூபாய் மட்டுமே. இதெல்லாம் எவ்வளவு பெரிய அநியாயம்.

தன்னைப் பார்க்க வந்து, உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு அள்ளியள்ளிக் கொடுக்கும் அரசு, 18 தொழிலாளர்களுக்குக் கொடுத்தது, தலா ரூ.2 இலட்சம் மட்டுமே! முதல்வர் விஜய்யின் அரசுக்கு மனச்சாட்சி இருக்கிறதா?

இதே முதல்வர் விஜய்யின் ஆட்சியில், இதுவரை 4 லாக்கப் மரணங்கள் நடந்துள்ளன... தமிழக போலீஸால் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டவர்களுக்கு என்ன இழப்பீடு தரப்பட்டுள்ளது? இவற்றையெல்லாம் சீர்தூக்கிப்பார்த்தால், கரூரில் உயிரிழந்தோருக்கான இழப்பீடு அதிகமென்பதும் அரசியல் சுயநலத்தால் தரப்பட்டது என்பதும் புரியும்! கரூருக்கு வழங்கிய இழப்பீட்டை, தமிழ்நாடு முழுக்க நடக்கும் அசம்பாவிதங்களுக்கு வழங்க வேண்டும்தானே? அனைவருமே உயிர்கள்தானே? முதல்வர் விஜய், தமிழ்நாடு முழுமைக்குமான முதல்வராக இருக்க வேண்டும். அரசியல் லாப நட்டக்கணக்கு பார்க்காமல், மக்களைச் சமமாகப் பாவிப்பவராக இருக்க வேண்டும்! இதுதான் அனைவரின் எதிர்பார்ப்பும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



வி.பி.மணி



### வணிகர்களின் வசந்த காலம்!

2009-ஆம் ஆண்டு, வணிகர்களுக்குப் பல்வேறு வரிச் சலுகைகளையும் நலத்திட்டங்களையும் வாரி வழங்கி, இந்தியாவில் முதன் முறையாக வணிகர் நல வாரியம் அமைத்துத்தந்த தலைவர் கலைஞர் அவர்களை, தலைமைச் செயலகத்தில் வணிகர் சங்கத் தலைவர்கள் சி.நவமணி, மயிலை. சி.பெரியசாமி மற்றும் நிர்வாகிகளுடன் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தோம். அப்போது நான், 'வணிகர்களின் பாதுகாவலர்' என ஒரு கவிதை எழுதி, தலைவரிடம் அளித்தேன். அந்தக் கவிதையை முழுவதுமாகப் படித்துப் பார்த்து, அவருக்கே உரிய புன்முறுவலுடன் என்னைத் தோளில் தட்டி பாராட்டினார். அந்த நினைவுகள், என்றென்றும் ஊக்கத்தையும் புத்துணர்வையும் அளிப்பவை.

**– சேப்பாக்கம் வி.பி.மணி,**
**மாநில துணைச் செயலாளர்,**
**கழக வர்த்தகர் அணி, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### காணலாம் மேலும் பல வெற்றிகள்!

1959-ஆம் ஆண்டு, முரசொலி பொங்கல் மலருக்குப் பேரறிஞர் அண்ணா வாழ்த்துச் செய்தி எழுதினார். அதில், "இதனைத் தேன்கூடெனச் செய்வது எளிது! நாடு நமதாக, நமது நல்லதாக, நல்லது நானிலத்துக்கு வழிகாட்ட வல்லதாக ஆக்கிடும் பணி அத்தகையதோ?" என்பர் அன்பர். பணியின் கடினம் அறியாமலில்லை. ஆயின், முயன்றால் முடியும் என்பதற்கான அறிகுறிகளை நான் பெரிதும் காண்கிறேன். நீர் காணவேண்டுமென்றும் விழைகிறேன் என வாழ்த்தியதுடன், ஆரூர் நமக்களித்த அருந்தம்பி உள்ளத்தில் தேங்கியும் தூங்கியும் உள்ள திறமத்தனையும், கல்லி எடுத்திட்டால் காணலாம், மேலும் பல வெற்றிகள்" என்று கலைஞரையும் வாழ்த்தினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900